தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

உரிமையாளர் N.S.K.சிவக்குமார் B.Com.,
N.S.K
தங்கமாளிகை
தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களுக்கு
செய்கூலி, சேதாரம் இல்லை
96557 79285
98429 78833


Vol: 02 | Issue: 171 | 4 Pages | 18.1.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 171 | 4 பக்கங்கள் | 18.1.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று**

**விளக்கம்:** பலச் சுடர்களை உடைய பெரு நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்த போதிலும் கூடுமானால் அவன்மேல்சினங்கொள்ளாதிருத்தல்நல்லது.

## புத்தர் வடிவிலான டொனால்டு டிரம்ப் சிலைகள்: ஆன்லைனில் ரூ.2.30 லட்சத்துக்கு விற்பனை



பெய்ஜிங், ஜன.18

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப்பின் உருவத்தை புத்தர் போல உருவாக்கியுள்ளார் சீனாவைச் சேர்ந்த பீங்கான் உருவ வடிவமைப்பாளரும் சிற்பியுமான ஹாங் ஜின்ஷி. ஜனவரி 20ம் தேதி அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்கவுள்ள நிலையில், புத்தர் வடிவிலான டிரம்ப் சிலைகள் உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளன.

சீனக் கைவினைக் கலைஞர் ஹாங் ஜின்ஷியின் சிலைகள், 140 டாலர்கள் முதல் 2,700 டாலர்கள் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. கலை மற்றும் அரசியலை இணைக்கும் இந்த பீங்கான் சிலைகள், உலகெங்கிலும் உள்ள சிலை சேகரிப்பாளர்களிடம் அதிக ஆர்வத்தை ஈர்த்துள்ளன.

999 முதல் 20,000 யுவான்களுக்கு (சுமார் ரூ.11,000 முதல் ரூ.2.30 லட்சம் வரை) அவற்றின் அளவைப் பொறுத்து விலை நிர்ணயம் செய்துள்ளார் ஹாங் ஜின்ஷி. முதன்முதலில் 2021 ஆம் ஆண்டில் ஈகாமர்ஸ் தளமான டோபோவில் இது வைரலாக பரவியது. இந்த சிலைகள் அமேஸான் மற்றும் சீன இணையதள விற்பனை நிறுவனமான டெழுவில் விற்பனைக்கு உள்ளன.

இதுகுறித்து 47 வயதான ஹாங் ஜின்ஷி கூறுகையில்,

"தேர்தலில் அவர் வெற்றி பெற்ற பின்னாள்களில் நிறைய ஆர்வம் இருந்தது. முதலில் சிலைகளை நகைச்சுவைக்காக வடிவமைத்தேன். ஆனால், கடந்த சில ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான பீங்கான் சிலைகளை உருவாக்கியுள்ளேன். டிரம்பின் செயல் முறையும் புத்தர் சிலையின் வடிவமும் இரண்டு எதிரெதிர் வடிவங்கள் என்பதால் வாடிக்கையாளர்கள் புன்னகையுடன் வாங்கிச் செல்கின்றனர்" என தெரிவித்துள்ளார். இதனையடுத்து டொனால்டு டிரம்ப்சிலை விற்பனைசூடுபிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடல் கேபிள்களை பாதுகாக்க கடற்படையை அனுப்ப தயார்.. தைவான் ராணுவ மந்திரி தகவல்

தைபே: ஜன.18

தைவானை உலகளாவிய நெட்வொர்க்குகளுடன் இணைக்கும் வகையில் கடலுக்கடியில் இணைய கேபிள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் தொடர்பு கேபிளை சீனாவுடன் தொடர்புடைய கப்பல் ஒன்று சேதப்படுத்தியதாக சந்தேகிக்கப்படுகிறது. இதுதொடர்பாக தைவான் அரசு விசாரணை நடத்தி வருகிறது. இந்நிலையில், கடலுக்கடியில் தகவல் தொடர்பு கேபிள்களுக்கு அருகில் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயல்பாடு கண்டறியப்பட்டால் பதிலடி கொடுப்பதற்கு, கடலோர காவல்படைக்கு உதவ தேவைப்பட்டால் தைவான் தனது கடற்படையை அனுப்பும் என்று ராணுவ மந்திரி வெலிங்டன் கூ இன்று தெரிவித்தார். ஆயுதப்படைகள் கடலோர காவல்படையுடன் ஒருங்கிணைந்து கடல் கேபிள் அமைந்துள்ள பகுதிகளை கண்காணிக்க உதவும் என்றும் அவர் கூறினார்.



ஹாங்காங் நிறுவனத்திற்கு சொந்தமான ஆனால் கேமரூன் மற்றும் தான்சானியா ஆகிய இரு நாடுகளிலும் பதிவுசெய்யப்பட்ட ஒரு கப்பல் இந்த மாத தொடக்கத்தில் வடக்கு பகுதியில் உள்ள ஒரு கேபிளை சேதப்படுத்தியதாக தைவான் கூறியது. இருப்பினும் அந்த கப்பலின் நோக்கம் என்ன? என்பதை சரிபார்க்க முடியவில்லை என்றும் மோசமான வானிலை காரணமாக கப்பலில் ஏற முடியவில்லை என்றும் தைவான் கூறுகிறது.

இந்த குற்றச்சாட்டை கப்பலின் உரிமையாளர் மறுத்துள்ளார். மேலும் உண்மை நிலவரம் தெரியும் முன்பே தைவான் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாக சீன அரசாங்கம் கூறியுள்ளது.

## ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்: ரிக்டரில் 4.2 ஆக பதிவு



காபுல், ஜன.18

ஆப்கானிஸ்தானில் இன்று அதிகாலை திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 2.52 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

180 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 36.65 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 71.33 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

# சிவகங்கையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2 நாட்கள் கள ஆய்வு

சென்னை, ஜன.18

அரசின் நலத்திட்டங்கள் மக்களை சென்றடைகிறதா என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாவட்டம்தோறும் கள ஆய்வு செய்து அரசு விழாவில் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார். மேலும் அந்தந்த மாவட்ட கட்சி நிர்வாகிகளை சந்தித்து கட்சி வளர்ச்சி குறித்தும் பேசி வருகிறார்.

இந்த நிலையில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிவகங்கை மாவட்டத்துக்கு வருகிற 21ந்தேதி, 22ந் தேதி என 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கள ஆய்வு செய்கிறார். இதற்காக 21ந் தேதி (செவ்வாய்க்கிழமை) சென்னையில் இருந்து காலை 10 மணி அளவில் விமானம் மூலம் மதுரை வரும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து சாலை வழியாக சிவகங்கை செல்கிறார்.





தொடர்ந்து 21ந் தேதி காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நூலகத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். 22ந் தேதி சிவகங்கை அரசு கலைக்கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் கலந்து கொண்டு ஏற்கனவே முடிக்கப்பட்ட வளர்ச்சித்திட்ட பணிகளை திறந்து வைப்பதுடன், புதிய வளர்ச்சித்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

## எம்.ஜி.ஆர். சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மரியாதை

சென்னை, ஜன.18

அதிமுக நிறுவனத்தலைவரும், முன்னாள் முதல்அமைச்சருமான எம்.ஜி.ஆரின் 108வது பிறந்தநாள் இன்று தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி, எம்.ஜி.ஆரின் உருவப்படத்திற்கு அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மரியாதை செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், எம்.ஜி.ஆர். பிறந்தநாளையொட்டி, சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலை, தலைமைக் கழக எம்.ஜி.ஆர். மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். உருவச் சிலைக்கு பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



அதனைத்தொடர்ந்து, முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், தலைமைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் என பலரும் எம்.ஜி.ஆர். சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர்அதிமுககட்சிகொடியை ஏற்றி வைத்து 108 கிலோ எடை கொண்ட கேக்கை வெட்டி கழக நிர்வாகிகளுக்கு எடப்பாடி பழனிசாமி இனிப்பு வழங்கினார்.

## திருவெண்ணெய்நல்லூர்: முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். 108ஆம் பிறந்தநாளை முன்னிட்டு மலர் தூவி மரியாதை

திருவெண்ணெய்நல்லூர், ஜன.18

முன்னாள்முதல்வர்எம்.ஜி.ஆர். 108ஆம் பிறந்தநாளை முன்னிட்டு மலர் தூவி மரியாதை பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டன திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா T.புதுப்பாளையம் கிராமத்தில் முன்னாள்முதல்அமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் 108 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு சட்ட மன்ற எதிர்கட்சி தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் ஆணைக்கிணங்க கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் திரு. இரா.குமரகுரு EX.MLA அறிவுறுத்தலின் பேரில் ஒன்றிய கழக செயலாளர் k.இராமலிங்கம் அவர்களின் வழிக்கட்டுதலின் பேரில் கள்ளக்குறிச்சி மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் முருகன் நடராஜன் அவர்களின் ஏற்பாட்டில் அவருடைய தந்தை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆதி. நடராஜன் அவர்களின் தலைமையில் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் P. பலராமன், மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர் ஆதி. வெங்கடேசன் , கிளை கழக செயலாளர் D.முருகன் , முன்னாள் கிளை கழகச் செயலாளர் M.ராமு ,மாவட்ட MGR இளைஞர் அணி இணைச் செயலாளர் P.ரவி மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர்R.வெங்கடராமன்,மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் J.சஞ்சீவி , மாவட்ட மகளிரணி துணைச் செயலாளர் பிரியா ராஜேஷ் ,ஒன்றிய இளைஞர் பாசறை,இளம் பெண்கள் பாசறை துணைத் தலைவர் த.ஐயப்பன் , வே.முருகன் ஒன்றிய வர்த்தக அணி துணைத் தலைவர் ஒன்றிய மகளிர் அணி பொருளாளர் மு. புஷ்பா , கிளை கழக செயலாளர் மணிகண்டன் கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் உடன் இருந்தனர்.



## வெலிங்டன் ராணுவ மையத்தில் சாகச நிகழ்ச்சியில் அசத்திய வீரர்கள் பார்வையாளர்கள் பரவசம்

குன்னூர், ஜன.18

பிரிட்டீஷ் ராணுவ அதிகாரி சர் பிரான்சிஸ் புட்சாரிடம் இருந்து இந்திய ராணுவ அதிகாரி ஜெனரல் கே.எம்.கரியப்பாவிடம் ஜனவரி 15ந்தேதி ராணுவ பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 15ந்தேதி இந்திய ராணுவ தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் குன்னூர் வெலிங்டன் எம்.ஆர்.சி. ராணுவ மையத்தில் நேற்று 77வது ஆண்டு ராணுவ தினம் கமாண்டன்ட் கிறிஸ்து தாஸ் தலைமையில் கொண்டாடப்பட்டது.





அப்போது ராணுவ வீரர்கள் பங்கேற்ற களரி, செண்டைமேளம், சிலம்பம், வாள் சண்டை போன்ற சாகச நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.

தொடர்ந்து தற்காப்பு கலைகளும் செய்து காண்பிக்கப்பட்டன. பள்ளிக்குழந்தைகளுக்கு யோகாபயிற்சியும் அளித்து ஊக்குவித்தனர்.

வெலிங்டன் ராணுவ மையத்தில் நடைபெற்ற சாகச நிகழ்ச்சிகளை பள்ளி மாணவர்கள், அதிகாரிகள் உள்பட பலரும் நேரில் கண்டுகளித்து ரசித்தனர். நிகழ்ச்சியின் முடிவில் ராணுவ வீரர்கள் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# பொங்கல் பண்டிகை விடுமுறை: வண்டலூர் பூங்காவிற்கு வருகை தந்த 80 ஆயிரம் பார்வையாளர்கள்

சென்னை, ஜன.18

வண்டலூர அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குனர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொங்கல் பண்டிகை விடுமுறையை குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் கொண்டாடும் பிரபலமான இடங்களில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவும் ஒன்று. இந்த பொங்கல் வாரத்தில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு மாற்றுத்திறனாளிகள் மற்றும் குழந்தைகள் உட்பட 80,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை புரிந்துள்ளனர்.

பார்வையாளர்களின் வருகை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் பூங்கா நிர்வாகம், சம்பந்தப்பட்ட பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து. அனைத்து பார்வையாளர்களின் வசதியையும் உறுதிப்படுத்த விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

★ பார்வையாளர்கள் டிக்கெட்டுகளை டிஜிட்டல் முறையில் பெற ஊக்குவிக்கப்பட்டனர். மேலும், இலவச WiFi வசதியும் வழங்கப்பட்டது. கூடுதலாக, பணபரிவர்த்தனைகளுக்கு தனி கவுன்டர்கள் இருந்தன. மேலும், தனி டிக்கெட் கவுண்டர்களும் அமைக்கப்பட்டது.

★ இரு சக்கர வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்காக தனி வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தப்பட்டு 8000 மேற்பட்ட பார்வையாளர்களால் பயன்படுத்தப்பட்டது. வாகன நிறுத்தது மிடத்திலிருந்து பூங்காவிற்கு பார்வையாளர்கள் வர இலவச பேருந்து வசதி அமைத்து தரப்பட்டது.

★ சுமார் 6000க்கும் மேற்பட்ட 8 வயதுக்குட்பட்ட குழந்தை பார்வையாளர்களுக்கு பெற்றோரின் தொடர்பு எண்ணுடன் கை வளையம் வழங்கப்பட்டது. ★ கூடுதலாக 15 சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள், 24 உயிர் கழிப்பறைகள் மற்றும் ஆவின் பாலக விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன.

★ நான்கு இடங்களில் அவசர நிலைக்கு ஆம்புலன்ஸ் கொண்ட மருத்துவ குழு மற்றும் உதவிமையங்கள் அமைக்கப்பட்டது. இதை. 5000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பயன்படுத்தினர். ஒரு தீயணைப்பு வாகனமும் நிறுத்தப்பட்டிருந்தது.

★ பார்வையாளர்களின் நடமாட்டத்தை கட்டுப்பாட்டு அறையிலிருந்து CCTV அமைப்பு மூலம் கண்காணிக்கப்பட்டு கூட்டத்தை வழிநடத்த சரியான வழிமுறைகள் வழங்கப்பட்டன.

★ 90 சீருடை அணிந்த வன ஊழியர்கள். 150 காவல்துறை பணியாளர்கள் மற்றும் 50 NCC மாணவர்கள் கூட்டத்தை நிர்வகிப்பதற்கும் பார்வையாளர் உதவிக்காகவும் செயல்பட்டனர். ★ பார்வையாளர்களின் அனுபவத்தை மேலும் மேம்படுத்த பூங்காவின் முக்கிய இடங்களில் தகவல் மற்றும் வழி செலுத்தல் பலகைகள் நிறுவப்பட்டன.

★ பூங்காவின் வாகன நிறுத்துமிடத்திற்கு செல்ல தனி வழியும். வெளியேறி பேருந்து நிறுத்தத்தை அடைய தனி வழியும் ஏற்பாடு செய்திருந்தது.

★ அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா பார்வையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான பொங்கல் கொண்டாட்டமாக அமைய சிறப்பான முறையில் அனைத்து ஏற்பாடு செய்து பார்வையாளர்களின் மனதில் நீங்காத நினைவை உறுதி செய்தது. இவ்வாறு பூங்கா இயக்குனர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



குன்னூரில் மறைந்த முன்னாள் முதல்வர் எம் ஜி ஆர் அவர்களின் 108 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நகர செயலாளர் சரவணகுமார் தலைமையில் எம்.ஜி.ஆர்.அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கிளைக் கழகச் செயலாளர்கள் மகளிர் அணியினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கஞ்சா விற்றதை போலீசுக்கு காட்டி கொடுத்த வாலிபர் கொடூர கொலை 8 பேர் கும்பல் கைது

ராயபுரம், ஜன.18

புது வண்ணாரப்பேட்டை, நாகூரான் தோட்டத்தைச் சேர்ந்தவர் வினோத்குமார் (வயது 33). இவர் வாடகை வீட்டில் தங்கி மீன்பிடி தொழில் செய்து வந்தார். இவரது மனைவி மற்றும் குழந்தை பெங்களூரில் தனியாக வசித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் நேற்று இரவு வீட்டின் அருகே வினோத்குமார் அமர்ந்து இருந்தார். அப்போது மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம கும்பல் கையில் கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் திடீரென வினோத்தை சுற்றி வளைத்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் தப்பி செல்ல முயன்றார். ஆனாலும் சுற்றி வளைத்த கும்பல் வினோத்குமாரை சரமாரியாக வெட்டினர்.

இதில் அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்தார். எனினும் கொலை வெறி அடங்காத கும்பல் வினோத்குமாரின் முகத்தை வெட்டி சிதைத்தனர். இதில் சம்பவ இடத்திலேயே வினோத்குமார் பலியானார். அவரது முகமே தெரியாக அளவுக்கு சிதைக்கப்பட்டுஇருந்தது. இதனை கண்டு அப்பகுதி மக்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். பின்னர் கொலை வெறி கும்பல் அங்கிருந்து எந்த வித பதட்டமும் இல்லாமல் தப்பி சென்று விட்டனர்.

தகவல் அறிந்ததும் மீன் பிடி துறைமுக போலீசார் விரைந்து வந்து வினோத் குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில் கஞ்சா விற்பனையை போலீசுக்கு காட்டி கொடுத்ததால் வினோத்குமார் கொலை செய்யப்பட்டு இருப்பது தெரிந்தது.

இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து அதே பகுதியைச் சேர்ந்த ரித்திக் ரோஷன் (19), முத்து (19), கோகுல் (20), சுனில் (20), அபினேஷ் (19), எண்ணூர்சுனாமிகுடியிருப்பைச் சேர்ந்த யுவராஜ் (20), நரேஷ் குமார் (20), தண்டையார் பேட்டை பகுதியைச் சேர்ந்த லோகேஷ் (21) ஆகிய 8 பேரை கைது செய்தனர்.

கடந்த 2 நாட்கள் முன்பு நரேஷ் குமார், ரித்திக் ரோஷன், கோகுல் ஆகியோர் அதே பகுதியில் கஞ்சா விற்று உள்ளனர். இது பற்றி வினோத் குமார் போலீசுக்கு தகவல் தெரிவித்து உள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த நரேஷ் குமார், வினோத்குமாரிடம் ஏன் எங்களை போலீசிடம் காட்டிக் கொடுக்கிறாய் என்று கேட்டு தகராறில் ஈடுபட்டு உள்ளார். அப்போது வினோத் குமார் இங்கு எல்லாம் அமர்ந்து மது அருந்தக் கூடாது என்றும் கூறி கண்டித்து உள்ளார்.

இதனால் கோபம் அடைந்த நரேஷ் குமார் தனது நண்பர்களுடன் சேர்ந்து வினோத் குமாரை கொடூரமாக வெட்டி கொலை செய்தது தெரிந்தது. கைதான ரித்திக் ரோஷன், கோகுல், யுவராஜ், நரேஷ் குமார் ஆகிய 4 பேர் மீது கஞ்சா உள்பட அடிதடி வழக்குகள் உள்ளன. புதுவண்ணார்ப்பேட்டையில் பொங்கல் விடுமுறை நாளில் தொடர்ந்து 2 கொலைகள் அடுத்தடுத்து நடந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இன்பநிதியின் நண்பர்களுக்காக மாவட்ட கலெக்டரை நிற்க வைப்பதா? அண்ணாமலை ஆவேசம்

மதுரை, ஜன.18

மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி கோலகலமாக நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சியை துணை முதலமைச்சர் உதயநிதி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திமுக அமைச்சர்களும் துணை முதலமைச்சரின் மகன் இன்பநிதி மற்றும் அவரது நண்பர்களும் கலந்து கொண்டு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை கண்டு களித்தனர்.

இந்நிலையில் துணை முதலச்சரின் மகனின் நண்பர்களுக்காக மாவட்ட ஆட்சியரை அவமானப்படுத்துவதா என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் கூறியதாவது:

மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைக் காண, தனது மகன் இன்பநிதி மற்றும் அவரது நண்பர்களுடன் சென்றிருக்கும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஜல்லிக்கட்டு விழா மேடையில் தனது மகனின் நண்பர்களை அமர வைப்பதற்காக, நாற்காலியில் அமர்ந்திருந்த மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா அவர்களை, மேடையில் இருந்து அகற்றியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

துணை முதலமைச்சர் மகனின் நண்பர்களுக்காக, பெண் மாவட்ட ஆட்சியரை நாற்காலியை விட்டு எழுந்திருக்க செய்வது, தமிழகத்தின் இருண்ட காலமான திமுகவின் 2006 2011 ஆட்சிக் காலத்தை விட மோசமான அதிகார துஷ்பிரயோகம்.

முதலமைச்சர் குடும்பத்துக்குச் சேவகம் செய்வதற்காகவே இருக்கும் அமைச்சர்கள் மேடையில் இருக்கையில், பெண் அரசு அதிகாரியை ஏன் அவமானப்படுத்துகிறீர்கள்?

துணை முதலமைச்சர் உதயநிதிக்கு, 2011 தேர்தல் முடிவுகளும், அதற்குப் பின் வந்த பத்து ஆண்டுகளும் நினைவிருக்கட்டும். இந்த மன்னராட்சி மனநிலைக்கு, தமிழக மக்கள் வரும் 2026ம் ஆண்டு முடிவு கட்டுவார்கள். என்று அண்ணாமலை கூறினார்.

# குமரியில் அலைமோதிய சுற்றுலா பயணிகள் கூட்டம்

கன்னியாகுமரி, ஜன.18

சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். இங்கு வருடம் முழுவதும் சுற்றுலாப்பயணிகள் வந்து சென்றாலும் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்களும் வழக்கத்தை விட அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். இந்த 3 மாத காலமும் இங்கு சீசன் காலமாக கருதப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் 16ந்தேதி முதல் சபரிமலை ஐயப்ப பக்தர்கள் சீசனும் தொடங்கி உள்ளது. இதனால் தினமும் கன்னியாகுமரிக்கு ஆயிரக் கணக்கான ஐயப்ப பக்தர்களும் வந்து குவிந்த வண்ணமாக உள்ளனர். இந்த நிலையில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை மற்றும் பொங்கல் பண்டிகை, உழவர் திருநாள், மாட்டுப் பொங்கல், திருவள்ளுவர் தினம் காணும்பொங்கல்போன்ற தொடர் விடுமுறையையொட்டி கன்னியாகுமரியில் தற்போது சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது.

இதனால் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலித்துறை கடற்கரை பகுதியில் இன்று அதிகாலையில் சூரியன் உதயமாகும் காட்சியை காண ஏராளமானோர் திரண்டனர். ஆனால் மழை மேகம் திரண்டு இருந்ததன் காரணமாக சூரியன் உதயமான காட்சி தெளிவாகத் தெரியவில்லை. தொடர்ந்து முக்கடல் சங்கமத்தில் சுற்றுலாபயணிகள் ஆனந்த குளியல் போட்டனர். கடல் நடுவில் அமைந்துள்ள விவேகா னந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட அதிகாலை 5 மணியில் இருந்தே சுற்றுலா பயணிகள் படகுத் துறையில் நீண்ட கியூவில் காத்திருந்தனர். பொங்கல் பண்டிகை தொடர் விடுமுறையையொட்டி காலை 8 மணிக்கு பதில் 2 மணி நேரம் முன்னதாக இன்று காலை 6 மணிக்கு படகு போக்குவரத்து தொடங்கியது.

சுற்றுலா பயணிகளும் ஐயப்ப பக்தர்களும் சுமார் 3 மணி நேரம் வரிசையில் காத்திருந்துபடகில்சென்று விவேகானந்தர் மண்டபத்தை பார்வையிட்டனர். பின்னர் அங்கிருந்து கண்ணாடி பாலம் வழியாக திருவள்ளுவர் சிலைக்கு சென்று பார்வையிட்டனர். மேலும் கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலாத் தலங்களான காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவுப் பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள பேரூராட்சி பொழுது போக்கு பூங்கா, சன்செட் பாயிண்ட்கடற்கரைபகுதி, மியூசியம், அரசு அருங்காட்சியகம், மீன் காட்சி சாலை, கலங்கரை விளக்கம், விவேகானந்தபுரத்தில் உள்ளபாரதமாதாகோவில், ராமாயண தரிசன சித்திர கண்காட்சி கூடம், அரசு பழத்தோட்டம் சுற்றுச்சூழல் பூங்கா, வட்டக்கோட்டை பீச் உள்பட அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் இன்று காலையில் இருந்தே சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், திருப்பதி வெங்கடாஜலபதி கோவில், கொட்டாரம் ராமர் கோவில், சுசீந்திரம் தாணுமாலயசாமி கோவில் போன்றவற்றிலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. இதனால் தொடர் விடுமுறையயொட்டி சுற்றுலா தலங்கள் களை கட்டியது. கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. சுற்றுலா தலங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டு இருந்தது. கடற்கரைப் பகுதியில் சுற்றுலா போலீசாரும் கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

# சிங்கபெருமாள் கோவில் அருகே வேன் மோதி முதியவர் பலி

வண்டலூர், ஜன.18

சிங்கபெருமாள் கோவில் அடுத்த அஞ்சூர் கிராமத்தை சேர்ந்தவர் கோவிந்தசாமி (வயது78). நேற்று மாலை அவர் திருத்தேரி பகத்சிங் நகர் பகுதியில் உள்ள தனது மகள் வீட்டிற்கு சென்று விட்டு நடந்து வந்தார்.

மகேந்திரா சிட்டி ஜி.எஸ்.டி., சாலை சந்திப்பில் சாலையை கடக்க முயன்ற போது

விழுப்புரம் மாவட்டம், கோணாதி குப்பம் பகுதியில் இருந்து சென்னை நோக்கி வந்த வேன் திடீரென கோவிந்தசாமி மீது மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே கோவிந்தசாமி பரிதாபமாக உயிரிழந்தார்.

பொத்தேரி போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் குறித்து வழக்கு பதிவு செய்து வேனை ஓட்டி வந்த வியாசர்பாடியை சேர்ந்த டிரைவர் காளிதாசகை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தரமான காற்று கிடைக்கும் நகரங்களில் இந்திய அளவில் நெல்லைக்கு முதலிடம்

நெல்லை, ஜன.18

இந்தியாவில் காற்றின் தரம் ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் சவாலாக இருக்கிறது. எனினும் பல்வேறு நகரங்களில் குறிப்பிடத்தக்க மாறுபாடுகளுடன், இந்தியா முழுவதும் உள்ள நகரங்களை மதிப்பிடுவது அவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுகிறது. இந்நிலையில் 2025ல் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம், இந்தியா முழுவதும் உள்ள நகரங்களுக்கான சமீபத்திய காற்று தரக் குறியீட்டு தரவை வெளியிட்டுள்ளது.

இந்த அட்டவணை தற்போது சிறந்த மற்றும் தூய்மையான காற்றின் தரத்தை அனுபவிக்கும் நக



ரங்களை எடுத்துக்காட்டுகிறது. அதில் இந்திய நகரங்களில் மிகச்சிறந்த காற்றின் தரம் இருக்கும் நகரமாக நெல்லை திகழ்கிறது.

தமிழ்நாட்டின்நெல்லை முதல் இடத்திலும், அருணாச்சல பிரதேசத்தின் நாகர் லகுன் 2வது இடத்தையும், கர்நாடகாவின் மடிக்கேரி பகுதி 3வது இடத்தையும் பிடித்துள்ளது. தஞ்சாவூர் 5வது இடத்தை பிடித்துள்ளது. காற்றின் தரம் சிறப்பாக இருக்கும் மாநிலங்களில் கர்நாடகாவின் கப்பல், உத்தரப்பிரதேசத்தின் வாரணாசி மற்றும் கேரளாவின் கண்ணூர் நகரமும் இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

காற்றின் தரம் மிக மிக மோசமாக இருக்கும் நகரத்தில் முதல் இடத்தை இந்திய தலைநகரான புது டெல்லி பிடித்துள்ளது. மோசமான காற்று தரம் உள்ளதாக 2வது இடத்தை உத்தரபிரதேச மாநிலத்தின் காசியாபாத்தும், 3வது இடத்தினை மேகாலயாவின் பிரின் ஹேட் நகரமும் பிடித்துள்ளன. சண்டிகர், உத்தர பிரதேசம், ஜார்க்கண்ட், ஹிமாச்சல் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகியவை காற்றின் தரம் மோசமாக உள்ள முதல் 10 மாநில பட்டியலில் இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# உத்திரமேரூர் அருகே ஏரியில் உடல்கள் மீட்பு 3 மாணவர்கள் எரித்து கொலையா?

உத்திரமேரூர், ஜன.18

காஞ்சிபுரம் அடுத்த உத்திரமேரூர் அருகே உள்ள பழையசீவரம் கிராமத்தை சேர்ந்தவர்கள் பரத்(வயது 17), சத்ரியன்(17), விஷ்வா(17). இவர்கள் 3 பேரும் நண்பர்கள் ஆவர்.

இவர்களில் பரத், ஒரகடத்தில் உள்ள ஐ.டி.ஐ.யிலும், சத்ரியன் வாலாஜா பாத்தில் உள்ள பள்ளியில் 12ம் வகுப்பும் படித்து வந்தனர். விஷ்வா பிளஸ்2 முடித்து உள்ளார். கடந்த 12ந்தேதி வீட்டை விட்டு வெளியே சென்ற பரத் உள்பட 3 பேரும் பின்னர் வீடுதிரும்பவில்லை. அவர்களைகுடும்பத்தினர் தேடி வந்தனர்.

மேலும் இது தொடர்பாக சாலவாக்கம் போலீசில் புகார் செய்யப்பட்டது. இந்த நிலையில் உத்திரமேரூர் அடுத்த காட்டாங்குளம் ஊராட்சிக்குட்பட்ட விழுத வாடி கிராமத்தில் உள்ள ஏரியில் பரத், சத்ரியன், விஷ்வா ஆகியோர்பிணமாகமிதந்தனர்.

தகவல் அறிந்ததும் உத்திரமேரூர் போலீசார் 3



பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். சம்பவ இடத்தில் காஞ்சிபுரம் டி.எஸ்.பி. சங்கர் கணேஷ், இன்ஸ்பெக்டர் சங்கர சுப்பிரமணியன், சப் இன்ஸ்பெக்டர் மாரி செல்வம் விசாரணை நடத்தினர். மாணவர்கள் 3 பேரும் எப்படி இறந்தனர் என்பது தொடர்ந்து மர்மமாக உள்ளது.

அவர்களின் முகம் தீவைத்து எரிக்கப்பட்டு கருகி இருந்தது. மேலும் மாணவர்களின் முழங்கால், காலின் கீழ் பகுதியில் அரிவாளால் வெட்டப்பட்டதற்கான காயங்கள் இருந்தன. மேலும் இறந்து போன மாணவர்கள் அனைவரும் அவர்கள் அணிந்து இருந்த ஆடையுடன் இருந்தனர்.

அவர்கள்ஏரியில்குளிக்க வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது. எனவே மர்ம நபர்கள் மாணவர்கள் 3 பேரையும் கடத்தி எரித்து கொலை செய்து விட்டு உடல்களை ஏரியில் வீசி சென்று இருக்கலாம் என்று தெரிகிறது. உடல்கள் உப்பிய நிலையில் காணப்படுவதால் அவர்கள் மாயமான 12ந்தேதியே கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதேபோல் திருட்டு குற்ற வழக்கில் தொடர்புடைய சிறுமையிலூர் கிராமத்தை சேர்ந்த ஒருவருக்கும் மர்மமாக இறந்து போன பரத் என்பவருக்கும் கடந்த சில நாட்களுக்கு முன் பிரச்சனை ஏற்பட்டு வாக்குவாதம் நடந்ததாக சொல்லப்படுகிறது.

இந்த தகராறில் கொலை நடந்து உள்ளதா என்ற கோணத்திலும் போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளனர். மோதலில் ஈடுபட்ட அந்த வாலிபர் மாயமாகி இருப்பதால் சந்தேகம் வலுத்து உள்ளது.

மர்மமாக இறந்து போன 3 மாணவர்களுக்கு வேறு யாருடனும் மோதல் உள்ளதா? கடைசியாக செல் போன்களில் யாருடன் பேசினார்கள்? என்ற விபரத்தை சேகரித்து வருகிறார்கள். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பொங்கல் பரிசு தொகுப்பை இதுவரை வாங்காதவர்கள் பெற்றுக் கொள்ளலாம் அதிகாரி தகவல்

சென்னை, ஜன.18

பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்குதலா 1 கிலோபச்சரிசி, ஒருகிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு ரேசன் கடைகளில் வழங்கப்பட்டு வந்தது. இலவச வேட்டிசேலைகளும் ரேசனில் வழங்கப்படுகிறது. கடந்த 9ந் தேதி முதல் இவை வழங்கப்பட்டு வந்தது. சுமார் 70 சதவீத மக்கள் ரேசனில் பொங்கல் பரிசு தொகுப்பை வாங்கி விட்டனர். சிலர் பொங்கலுக்கு சொந்த ஊருக்கு சென்று விட்டதால் ரேசனில் பொருள் வாங்காமல் உள்ளனர்.

இது குறித்து கூட்டுறவுத்துறை உயர் அதிகாரி கூறுகையில், "விடுமுறை முடிந்து வந்தாலும் ரேசனில் பொது மக்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பை வழங்குமாறு உத்தரவிட்டுள்ளோம். எனவே பொங்கல் பரிசு தொகுப்பை வாங்காத பொதுமக்கள் ரேசன் கடைக்கு சென்று வாங்கிக் கொள்ளலாம்" என்று தெரிவித்துள்ளார்.

# கோடிக்கணக்கில் ஹவாலா பணம் வழிப்பறியில் கைதான போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் புழல் சிறையில் அடைப்பு

சென்னை, ஜன.18

சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனை அருகே கடந்த மாதம் முகமது கவுஸ் என்பவரை கத்தி முனையில் கடத்தி ரூ.20 லட்சம் வழிப்பறி செய்த வழக்கில் திருவல்லிக்கேணி போலீஸ் நிலைய சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ராஜா சிங், வருமான வரித்துறை அதிகாரிகள் பிரபு, தாமோதரன், பிரதீப் ஆகிய 4 பேர் கைது செய்யப்பட்டனர்.




இதில் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ராஜாசிங், வருமானவரித்துறை அதிகாரி தாமோதரன் ஆகிய இருவரையும் திருவல்லிக்கேணி போலீசார் காவலில் எடுத்து விசாரித்தனர். அப்போது இவர்களுக்கு மூளையாக செயல்பட்டது சைதாப்பேட்டை போலீஸ் நிலைய சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் சன்னி லாய்டு என்பது தெரிய வந்தது. அவர் 5 ஆண்டுகளுக்கும் மேலாக வழிப்பறி செய்த அதிர்ச்சி தகவலும் வெளியானது.

சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ராஜா சிங், சன்னி லாய்டு மற்றும் கைது செய்யப்பட்ட வருமான வரித்துறை அதிகாரிகள் ஆகியோர் கூட்டு சேர்ந்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வரப்படும் ஹவாலா பணத்தை பறிமுதல் செய்து அதை உயர் அதிகாரிகளிடம் ஒப்படைப்பதாக கூறி அவர்களே பங்கு போட்டுக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து சன்னி லாய்டை போலீசார் தேடி வந்த நிலையில் அவர் தலைமறைவாகி விட்டார். அவரை உத்தரகண்ட் மாநிலம் டேராடுனில் தனிப்படை போலீசார் கைது செய்து சென்னைக்கு அழைத்து வந்தனர். கோர்ட்டு உத்தரவின் பேரில் சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் சன்னி லாய்டு நீதிமன்ற காவலில் புழல் சிறையில் நேற்று அடைக்கப்பட்டார்.

இதையடுத்து போலீஸ் கமிஷனர் அருண், அவரை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார். சன்னி லாய்டு ஏற்கனவே சில வழக்குகளில் சிக்கி 3 முறை பணியிடை நீக்கம் செய்யப்பட்டவர்.

கோடிக்கணக்கில் ஹவாலா பணத்தை வழிப்பறி செய்த சப்இன்ஸ்பெக்டர் சன்னி லாய்டு அந்த பணத்தை கிழக்கு கடற்கரை சாலையில் ரிசார்ட் வாங்கி இருப்பதாகவும் ஜாம்பஜாரில் அதிநவீன உடற்பயிற்சி கூடம் வைத்திருப்பதாகவும் தகவல் வெளியாகின.

மேலும் அவர் எங்கெல்லாம் சொத்துக்கள் வாங்கி குவித்துள்ளார், எத்தனை கோடி வழிப்பறி செய்துள்ளார் என்பது போன்ற விவரங்களை சேகரிக்க போலீசார் திட்டமிட்டுள்ளனர்.

அதனால் அவரை ஒரு வாரம் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க முடிவு செய்துள்ளனர்.

பொங்கல் விடுமுறை முடிந்ததும் அடுத்த வாரம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்து அவரை விசாரணைக்கு எடுத்து மேலும் பல தகவல்களை திரட்ட திட்டமிட்டுள்ளனர்.

# ஆல்கொண்டமால் கோவிலில் உருவார பொம்மைகள் வைத்து பக்தர்கள் வழிபாடு



உடுமலை, ஜன.18

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள குடிமங்கலம் சோமவாரப்பட்டியில் ஆதி காலத்தில் அடர்ந்த காடுகளில் விஷப்பாம்புகள் வாழும் ஆலமரத்தின் கீழ் சிவலிங்க வடிவில் ஒரு புற்று இருந்தது. இந்தப் பகுதியில் மேய்ந்த பசுக்கள் புற்றில் நிலையாக பாலை சுரந்து வந்தன.

சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்த பசுவானது பாம்பினால் தீண்டப்பட்டு பாதிக்கப்பட்டபோது அந்தப் பசுவின் உடம்பின் மீது ஏறிய ஆலகால விஷத்தினை மாயவன் உண்டு பசுவினை காப்பாற்றியதால் ஆல்கொண்டமால் எனவும் ஆலம் உண்ட சிவனை குறிக்கும் வகையில் சிவலிங்க வடிவ புற்றில் கண்ணன் குடி கொண்டதால் ஆல்கொண்டமால் எனவும் இக்கோவில் விளங்கி வருகிறது.

தமிழர் திருநாள் திருவிழாவை முன்னிட்டு இக்கோவிலில் அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடந்தது. கிராமப்புறங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தங்களது கால்நடைகளின் கறவை பாலைகொண்டு வந்து ஆல்கொண்டமாலுக்கு அபிஷேகம் செய்து திருநீறும் தீர்த்தமும் பெற்று சென்றனர். மேலும் களிமண்ணால் செய்யப்பட்ட உருவார பொம்மைகளை வைத்து வழிபாடு செய்தனர்.

# தென் பெண்ணையாற்றில் குளித்த பள்ளி மாணவன் நீரில் மூழ்கி பலி

திருவெண்ணைநல்லூர், ஜன.18



விழுப்புரம் மாவட்டம் கப்பூர் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் மகன் குரு பிரசாத்( வயது15). விழுப்புரம் கீழ்பெரும்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார். பொங்கல் விடுமுறை என்பதால் நேற்று மதியம் நண்பர்களுடன் ஏனாதிமங்கலம் தென்பெண்ணையாற்றில் குளிக்க. சென்றுள்ளார். அப்போது ஆற்றில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருக்கும் போது திடீரென குரு பிரசாத் நீரில் மூழ்கி மாயமானார். உடன் வந்த நண்பர்கள் பொதுமக்கள் ஆகியோர் தேடிப் பார்த்தனர். குரு பிரசாத் கிடைக்காததால் திருவெண்ணைநல்லூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து திருவெண்ணைநல்லூர் தீயணைப்பு மற்றும் மீட்பு குழு நிலைய அலுவலர் சுந்தரேஷ்வரர் தலைமையிலான மீட்பு குழுவினர் வரவைத்து நீரில் மூழ்கி மாயமான குரு பிரசாத்தை தீவிரமாக இரவு 11 மணி வரை தேடி வந்தனர். வெளிச்சம் இல்லாத காரணத்தாலும் குளிரின் காரணமாகவும் தேடும் பணி நிறுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு விழுப்புரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சரவணன், துணை போலீஸ் சூப்பிரண்டு ரவீந்திர குமார் குப்தா ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று நீரில் மூழ்கி மாயமான குருபிரசாத்தை தேடும் பணியை பார்வையிட்டு ஆய்வு செய்தனர் .தீயணைப்பு மற்றும் மீட்பு குழுவினர் இன்று 2வது நாளாக தேடும் பணியில் ஈடுபட்ட நிலையில் குரு பிரசாத் பிணமாக மீட்டெடுக்கப்பட்டார். குரு பிரசாத் உடலை கைப்பற்றி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு பிரேதபரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். இது குறித்து காணை போலீஸ் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) மைக்கேல் இருதயராஜ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். நண்பருடன் குளிக்கச் சென்று பள்ளி மாணவன் நீரில் மூழ்கி இறந்த சம்பவம் கப்பூர் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# உடுமலை பஞ்சலிங்க அருவியில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்



உடுமலை, ஜன.18

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த திருமூர்த்தி மலையில் பஞ்சலிங்க அருவி உள்ளது. உடுமலை வனச்சரகத்தின் அடர்ந்த வனப்பகுதியில் உள்ள இந்த அருவிக்கு மேல்குருமலை, கீழ்குருமலை, குலிப்பட்டி பகுதியில் உற்பத்தியாகின்ற ஆறுகள் நீராதாரமாக உள்ளது. வனப்பகுதியில் பல்வேறு வழிகளில் ஓடி வருகின்ற ஆறுகள் இறுதியில் பஞ்சலிங்க அருவியில் ஒன்று சேர்ந்து விடுகின்றது.

இந்த அருவியில் குளித்து புத்துணர்வு பெறுவதற்காக வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்த நிலையில் பொங்கல் பண்டிகையையொட்டி அரசு, தனியார் அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர் விடுமுறை விடப்பட்டு உள்ளது.

அதைத் தொடர்ந்து கார், பஸ், வேன் உள்ளிட்ட வாகனங்களில் சுற்றுலா பயணிகள் திருமூர்த்தி மலையில் குவிந்து வருகின்றனர். அவர்கள் பஞ்சலிங்க அருவிக்கு சென்று இதமான கால நிலையை அனுபவித்தும் அருவியில் குளித்து புத்துணர்வும் அடைகின்றனர்.

அதுமட்டுமின்றி அருவி பகுதியில் குடும்பத்துடனும், தனியாக அமர்ந்தும் செல்பி, புகைப்படம் எடுத்து உறவினர்களுக்கு அனுப்பியும் சமூக வலைதளங்களில் பதிவிட்டு மகிழ்கின்றனர்.

இதனால் திருமூர்த்தி அணை, அருவி மற்றும் கோவில் பகுதியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிக அளவில் காணப்படுகிறது.

# மோட்டார் சைக்கிள்கள் மோதல்: தூக்கி வீசப்பட்ட வாலிபர் மீது கார் மோதியதில் பலி

தஞ்சாவூர், ஜன.18

தஞ்சை அடுத்த சென்னம்பட்டி அண்ணா நகர் காலனியை சேர்ந்தவர் நேதாஜி (வயது 29 ). இவர் நேற்று பிள்ளையார்பட்டி திருவையாறு சாலை டாக்டர் எஸ்.ஜி.நகர் அருகே தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது எதிரே மற்றொரு மோட்டார் சைக்கிளில் தஞ்சை 8ம் நம்பர் கரம்பையை சேர்ந்த கவுதம் (28) வந்து கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மோதிக் கொண்டன. இதில் இரண்டு பேரும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். அந்த நேரத்தில் எதிரே 8ம் நம்பர் கரம்பை பகுதியை சேர்ந்த பாரதிராஜா (27) என்பவர் ஓட்டி வந்த கார் எதிர்பாராத விதமாக நேதாஜி மீது மோதி ஏறி இறங்கியது. இந்த விபத்தில் நேதாஜி பலத்த காயமடைந்தார். இதையடுத்து நேதாஜி, கவுதம், பாரதிராஜா ஆகிய 3 பேரையும் அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேதாஜி இறந்தார். கவுதம், பாரதிராஜாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்த புகாரின் பேரில் தமிழ் பல்கலைக்கழகம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மலேசியாவில் ஜல்லிக்கட்டு போட்டி இலங்கை முன்னாள் அமைச்சர் விருப்பம்

ஈரோடு, ஜன.18

சிவகங்கை மாவட்டத்தை பூர்விகமாக கொண்ட இலங்கையை சேர்ந்த முன்னாள் அமைச்சர் செந்தில் தொண்டமான் ஜல்லிக்கட்டு காளைகளை வளர்ப்பதில் ஆர்வமிக்கவர்.



சிவகங்கையில் உள்ள இவரது தோப்பில் 10க்கும் மேற்பட்ட காளைகளை வளர்த்து வருகிறார். தமிழகத்தில் நடக்கும் ஜல்லிக்கட்டில் காளைகளை பங்கேற்க செய்து வருகிறார். காளைகளுக்காக தனி கேரவன் வசதியும் செய்துள்ளார். உலகபிரசித்திபெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் அவரது காளைகள் களம் கண்டு வெற்றிவாகை சூடியது.

ஜல்லிக்கட்டை பார்வையிட்ட செந்தில் தொண்டமான் கூறுகையில், தமிழகத்தில் நடக்கும் ஜல்லிக்கட்டை காண்பதற்காக வெளிநாட்டில் இருந்து அதிகளவில் வருகை தருகிறார்கள். மலேசியாவில் அதிகளவில் தமிழர்கள் வசித்து வருகிறார்கள். வரும் காலத்தில் மலேசியாவிலும் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என விருப்பம் தெரிவித்தார்.

# மதுபோதை தகராறில் வாலிபர் அடித்துக் கொலை

வண்டலூர், ஜன.18

உத்திரமேரூர் அடுத்த களியப்பேட்டை பகுதியை சேர்ந்தவர் தங்கராஜ். இவரது மகன் சரவணன் (வயது 20). நேற்று இரவு சரவணன் நண்பர்களுடன் சிங்கப்பெருமாள் கோவில் அடுத்த திருக்கச்சூர் பகுதியில் மதுகுடித்தார். அப்போது அவர்களுக்கு இடையே திடீரென தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரம் அடைந்த நண்பர்கள் சரவணனை சரமாரியாக தாக்கினர். இதில் பலத்த காயம் அடைந்த சரணவன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். உடனே உடன் இருந்த நண்பர்கள் அனைவரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

தகவல் அறிந்ததும் மறைமலை நகர் போலீசார் விரைந்து வந்து சரவணனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். இந்த கொலை தொடர்பாக போலீசார் விசாரித்த போது பரபரப்பு தகவல் கிடைத்தது. சரவணன் மற்றொரு நண்பருக்கு ரூ.10 ஆயிரம் கடன் கொடுக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டு வந்தது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கடன் கொடுத்த நண்பருடன் நெருக்கமாக உள்ள ஒருவரை சரவணன் தாக்கியதாக தெரிகிறது. இது தொடர்பாக மதுகுடித்த போது சரவணனை உடன் இருந்த நண்பர்கள் கேட்டு உள்ளனர். அப்போது ஏற்பட்ட மோதலில் சரவணன் அடித்து கொலைசெய்யப்பட்டு இருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து போலீசார் குற்றவாளிகளை தேடி வருகின்றனர்.

# மகள் திருமணத்துக்கு அழைப்பிதழ் கொடுக்க சென்ற தந்தை விபத்தில் பலி

திருவள்ளூர், ஜன.18

திருவள்ளூரை அடுத்த சேலை கிராமத்தைச் சேர்ந்தவர் தாமஸ் (வயது 55). ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். இவர் மகள் திருமணம் விரைவில் நடைபெற உள்ளது.



மகளின் திருமணத்திற்காக உறவினர்களுக்கு பத்திரிகை கொடுப்பதற்கு சென்னைக்கு தாமஸ் மோட்டார்சைக்கிளில் சென்றார். பின்னர் அவர் மீண்டும் திருவள்ளூர் நோக்கி திரும்பி வந்து கொண்டு இருந்தார்.

சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் ஆண்டரசன் பேட்டை அருகே வந்து கொண்டு இருந்தபோது பின்னால் வந்த அடையாளம் தெரியாத வாகனம் திடீரென தாமசின் மோட்டார் சைக்கிள் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டது.

இதில் மோட்டார் சைக்கிளோடு கீழே விழுந்ததில் தாமசின் தலை மற்றும் உடலில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அவரைமீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிரசிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இரவு 7 மணியளவில் சிகிச்சை பலனின்றி தாமஸ் பரிதாபமாக இறந்தார். இதற்கிடையே தாமஸ் விபத்தில் பலியானது பற்றி அறிந்ததும் அவரது உறவினர்கள் ஏராளமானோர் ஆஸ்பத்திரியில் குவிந்தனர். திடீரென அவர்கள் முறையான சிகிச்சை அளிக்கவில்லை என்று குற்றம்சாட்டி ஆஸ்பத்திரி முன்பு சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்ததும் திருவள்ளூர் துணை போலீஸ் சூப்பிரண்டு தமிழரசி டவுன் இன்ஸ்பெக்டர் அந்தோணி ஸ்டாலின் மற்றும் போலீசார் விரைந்து வந்து மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி கலைந்து போகச் செய்தனர்.

தொடர்ந்து ஆஸ்பத்திரியில் கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய வாகனம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பா.ஜ.க. மாவட்ட தலைவர்கள் அறிவிப்பு தாமதம் ஆவது ஏன்? பரபரப்பு தகவல்கள்

சென்னை, ஜன.18

தமிழக பா.ஜ.க. புதிய மாவட்ட தலைவர்கள் தேர்வு செய்வதில் இழுபறி நிலவுவதால் பட்டியல் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 3 பேர் வீதம் தேர்வு செய்து அவர்களிடம் நேர்முக தேர்வு நடத்தி தகுதியானவரை மாவட்ட தலைவராக தேர்வு செய்ய திட்டமிட்டு இருந்தனர்.

இந்த நிலையில் தேசிய கட்சியான பா.ஜ.க.வுக்குள்ளும் கோட்டா முறை புகுந்ததாக கூறப்படுகிறது. அதாவது மொத்தம் உள்ள 66 மாவட்டங்களில் மூத்த முன்னணி நிர்வாகி கள் 5 பேர் தங்கள் ஆதரவாளர்கள் தலா 5 பேருக்கு மாவட்ட தலைவர் பதவி பெற்றுள்ளதாகவும், 2 முன்னணி தலைவர்கள் தலா 10 மாவட்ட தலைவர்கள் பதவி பெற்றிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இதேபோல் கோட்டா அளவிலும் சிலர் பதவிகளை பெற்றுள்ளார்கள்.

இதை தவிர்த்து 15 மாவட்ட தலைவர்கள் பதவிகள் மட்டுமே நேரடி நியமனம் மூலம் நியமிக்க திட்டமிட்டுள்ளார்கள். இதற்கிடையில் 5 மாவட்டங்களில் தலைவராக தேர்வு செய்யப்பட்டவர்களை எந்த அடிப்படையில் தேர்வு செய்தீர்கள் சென்று நிர்வாகிகள் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள்.

நடைபெற்ற வீடியோ கான்பரன்சிங் பேச்சில் கடுமையான எதிர்ப்பு கிளப்பி இருக்கிறது. நேர்முகத் தேர்வு நடத்தாதது ஏன் என்று சிலர் கேள்வி எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து பாதியிலேயே அந்த கூட்டம் தடைபட்டது. இதனால் நேற்று வெளியிட இருந்த மாவட்ட தலைவர்கள் பட்டியல் வெளியிடப்படவில்லை. இன்று அல்லது நாளைக்குள் முதல் கட்டமாக 30 மாவட்ட தலைவர்கள் பட்டியலை வெளியிட முயன்று வருகிறார்கள்.

# கன்வேயர் பெல்டில் சிக்கி தனியார் தொழிற்சாலை ஊழியர் பலி போலீஸ் நிலையம் முற்றுகை

கடலூர், ஜன.18

கடலூர் கிழக்கு ராமபுரத்தை சேர்ந்தவர் சிவா (வயது 21) இவர் கடலூர் சிப்காட் பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலையில் ஒப்பந்த ஊழியராக பணிபுரிந்து வந்தார்

இந்த நிலையில் வழக்கம் போல் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த சிவா அங்குள்ள கன்வேயர் பெல்டில் சிக்கிக் கொண்டதாக கூறப்படுகிறது

அங்கு பணியில் இருந்த ஊழியர்கள் இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்து உடனடியாக ரத்த வெள்ளத்தில் கிடந்த சிவாவை மீட்டு கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

அப்போது சிவாவை பரிசோதனை செய்த டாக்டர் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இத்தகவல் அறிந்த கடலூர் கிழக்கு ராமாபுரத்தை சேர்ந்த பொது மக்கள் நூற்றுக்கணக்கானோர் கடலூர் முதுநகர் போலீஸ் நிலையத்திற்கு திரண்டு வந்தனர் . பின்னர் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு சம்பந்தப்பட்ட தொழிற்சாலை



நிர்வாகம் இறந்த சிவா குடும்பத்திற்கு 1 1/2 கோடி நிவாரண தொகையும் அவரது குடும்பத்தில் ஒருவருக்கு நிரந்தர வேலையும் வழங்க வேண்டும் என வலியுறுத்தி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதனை தொடர்ந்து கடலூர் முதுநகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரேவதி தலைமையில் போலீசார் சம்பந்தப்பட்ட பொது மக்களிடம் தொடர்ந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் கம்பெனி நிர்வாகத்தினரும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்கள் மற்றும் உறவினரிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பாக காணப்பட்டு வருகிறது.

# ஊரை விட்டு ஒதுக்கி வைத்ததால் தீக்குளிக்க முயன்ற மாற்றுத்திறனாளிக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை

கிருஷ்ணகிரி, ஜன.18

கிருஷ்ணகிரி மாவட்டம் மல்லிநாயனப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட எலுமிச்சங்கிரியை சேர்ந்தவர் வெங்கடேசன் (வயது 53). மாற்றுத்திறனாளி. இவருக்கு திருமணமாகி மனைவி ஒரு மகன், மகள் உள்ளனர்.

எலுமிச்சங்கிரியில் உள்ள பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவில் நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பதில் இவருக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே மன வருத்தம் இருந்து வந்துள்ளது. இது தொடர்பாக வெங்கடேசனையும், அவரது குடும்பத்தையும் ஊரைவிட்டு தள்ளி வைத்ததாக தெரிகிறது.

தன்னை கட்டப்பஞ்சாயத்து செய்து ஊரை விட்டு ஒதுக்கி வைத்ததாக கூறி கடந்த, 8ந் தேதி வெங்கடேசன் அதிகாரிகளிடம் புகார் செய்தார். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று மதியம், வெங்கடேசன் எலுமிச்சங்கிரி அரசு தொடக்கப்பள்ளி முன்பு தனது உடல் மீது டீசலை ஊற்றி தீக்குளித்தார். அப்போது அருகில் இருந்தவர்கள் தீயை அணைத்து அவரை காப்பாற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர்.



அங்கு வெங்கடேசனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து தகவல் அறிந்ததும் மகாராஜகடை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.

மேலும் தீக்காயம் அடைந்த வெங்கடேசனிடமும் மகாராஜகடை போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது வெங்கடேசன் அளித்துள்ள வாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது: என்னை கட்டப்பஞ்சாயத்து செய்து ஊரை விட்டு ஒதுக்கியதாக 9 பேர் மீது புகார் அளித்தேன். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடும் மன உளைச்சலால் தீக்குளித்து தற்கொலைக்கு முயன்றேன். என்னை ஊரை விட்டு ஒதுக்கி வைத்து தற்கொலைக்கு தூண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். இது தொடர்பாகவும் மகாராஜகடை போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# குடும்ப பிரச்சனையால் விபரீதம் மகன், மகளை கொன்று தம்பதி தற்கொலை

கோபி, ஜன.18

ஈரோடு மாவட்டம் கோபி அருகே சிறுவலூர் மீன் கிணறு, சின்ன மூப்பன் வீதியைச் சேர்ந்தவர் தனசேகர் (வயது 36). இவருக்கும் விரியங்கிணற்று பாளையத்தை சேர்ந்த பாலாமணி என்பவருக்கும் இடையே கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு 10 வயதில் வந்தனா என்ற மகளும், 7 வயதில் மோனிஸ் என்ற மகனும் உள்ளனர். வந்தனா 5ம் வகுப்பும், மோனிஸ் 2ம் வகுப்பும் படித்து வந்தனர். தனசேகரும், பாலாமணியும் வெள்ளாங்கோவிலில் உள்ள தனியார் கார்மெண்ட்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வந்தனர்.

தனசேகர் சரிவர வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்து வந்துள்ளார். இதனால் கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்தது. இந்நிலையில் நேற்று கணவன்மனைவி இருவருக்கும் இடையே மீண்டும் குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது.



இதனால் ஆத்திரத்தில் தென்னை மரத்தில் வரும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் விஷ மாத்திரைகளை குளிர்பானத்தில் கலந்து மகனுக்கும், மகளுக்கும் கொடுத்துள்ளனர். பின்னர் கணவன்மனைவி இருவரும் விஷத்தை குடித்துள்ளனர். வந்தனா, மோனிஸ் இருவரும் குடித்த போது கசப்பு காரணமாக கீழே துப்பி விட்டு கதறி அழுதனர்.

அதற்குள் தனசேகரனும், பாலமணியும் விஷம் குடித்து உயிருக்கு போராடினர். குழந்தைகளின் அலறல் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் அவரது வீட்டுக்கு ஓடி வந்தனர். நான்கு பேரையும் மீட்டு பெருந்துறை உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். ஆனால் செல்லும் வழியிலேயே, தனசேகரனும் பாலமணியும் உயிரிழந்தனர். குழந்தைகள் வந்தனாவும், மோனிஷ் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தைகள் வந்தனா, மோனிஸ் இருவரும் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தனர்.

இதுகுறித்து சிறுவலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். குடும்ப தகராறு காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 2 மாட்டு வியாபாரிகளிடம் ரூ.4.20 லட்சம் பறிமுதல்: பறக்கும் படையினர் நடவடிக்கை

ஈரோடு, ஜன.18

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதனையொட்டி, வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்குழுவினர் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் உரிய ஆவணங்களின்றி கொண்டு வரும் பணம் மற்றும் பரிசு பொருட்களை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்நிலையில், ஈரோடு கருங்கல்பாளையம் சோதனை சாவடி அருகே தேர்தல் பறக்கும் படையினர் இன்று அதிகாலை வாகன சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். இதில், காரை ஓட்டி வந்தவரிடம் ரூ.2 லட்சம் ரொக்கம் இருந்தது. அவரிடம் விசாரணை நடத்தியதில், அந்த நபர் கேரளா மாநிலத்தை சேர்ந்த மாட்டு வியாபாரி ரபீக் என்பதும், கருங்கல்பாளையம் மாட்டு சந்தைக்கு மாடுகள் வாங்க பணத்தை எடுத்து வந்ததாக கூறியுள்ளார்.

இருப்பினும், அந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் பறக்கும் படையினர் ரூ.2 லட்சத்தையும் பறிமுதல் செய்து, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

இதேபோல், ஈரோடு குமலன்குட்டை பகுதியில் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டனர். அப்போது, அங்கு வந்த காரில் சோதனை செய்தபோது, காரில் ரூ.2.20 லட்சம் ரொக்கம் இருந்தது. இதையடுத்து காரை ஓட்டி வந்தவரிடம் நடத்திய விசாரணையில், அவர் கேரளாவை சேர்ந்த முனீர் என்பதும், கருங்கல் பாளையம் மாட்டு சந்தைக்கு மாடு வாங்க பணத்தை எடுத்து வந்ததும் தெரியவந்தது.



ஆனால் உரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் பறக்கும் படையினர் பணத்தை பறிமுதல் செய்து, தேர்தல் பிரிவு கட்டுப்பாட்டு அலுவலரிடம் ஒப்படைத்தனர். இருவரிடம் உரிய ஆவணங்கள் சமர்பித்து பெற்று செல்லலாம் என பறக்கும் படையினர் அறிவுறுத்தினர். ஒரே நாளில் 2 வியாபாரிகளிடம் பறக்கும் படையினர் ரூ.4.20 லட்சம் பறிமுதல் செய்திருப்பது வெளிமாநில மாட்டு வியாபாரிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

# திருவண்ணாமலையில் அண்ணாமலையார் கிரிவலம் வழிநெடுகிலும் பக்தர்கள் தரிசனம்



வேங்கிக்கால், ஜன.18

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில்நடக்கும்விழாக்களில் திருவூடல் விழா முக்கியமானது.

ஆண்டுதோறும் தை மாதம் 2ம் நாள் இந்த விழா நடக்கும். அதன்படி, நேற்று அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டதும், சாமி மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது.

தொடர்ந்து, அதிகாலை 6 மணிக்கு அபிதகுஜாம்பாள் சமேத அண்ணாமலையார் தனி வாகனத்தில் எழுந்தருளி, நந்தியம் பெருமானுக்கு அருளாசி வழங்கினார். பின்னர், திட்டிவாசலில் சூரியனுக்கு காட்சியளித்தார்.

இதையடுத்து, அண்ணாமலையார், பராசக்தி அம்மன், சுந்தரமூர்த்தி நாயனார் தனித்தனி வாகனங்களில் எழுந்தருளி,

மாடவீதியில் 3 முறை வலம் வரும் வைபவம் நடந்தது.

பின்னர், இரவு 7.30 மணிக்கு மேல் சாமி அம்பாள் இடையே திருவூடல் உற்சவம் நடந்தது. அப்போது சுந்தரர் தூது சென்றார்.

இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமியை வழிபட்டனர். பின்னர், பராசக்தி அம்மன் கோவிலுக்கு திரும்பினார்.

அண்ணாமலையார் திருமஞ்சன கோபுரத்தெருவில்உள்ளகுமரக்கோவில் சென்றார்.

ஆண்டுக்கு 2 முறை அண்ணாமலையார் கிரிவலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். அதே போன்று வருடம் தொடக்கத்தில் இன்று அதிகாலை கோவிலில் இருந்து புறப்பட்டு அண்ணாமலையார் 14 கிலோமீட்டர் தூரம் உள்ள அண்ணாமலையை வலம் வந்தார். கிரிவலம் வந்த அண்ணாமலையாரை வழிநெடுகிலும் பக்தர்கள்வழிபட்டனர். பகல் 11 மணி அளவில் கோவிலுக்கு திரும்பினார்.

தொடர்ந்து, சாமியுடன் அம்பாள் சமாதானம் அடையும் மறுவூடல் உற்சவம் கோவில் 2ம் பிரகாரத்தில் நடக்கிறது.

# விஜய் சேதுபதி பிறந்த நாளில் 'ஏஸ்' படத்தின் கிளிம்ஸ் வீடியோ வெளியீடு




கடந்த 2018ம் ஆண்டு விஜய் சேதுபதி நடிப்பில் வெளியான திரைப்படம் ஒருநல்லநாள்பார்த்துசொல்றேன். இப்படத்தை ஆறுமுக குமார் இயக்கியிருந்தார். இத்திரைப்படம் பெரிய அளவில் வரவேற்பு பெறாத நிலையில், 5 ஆண்டுகள் கழித்து இந்த கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது. இப்படத்தின் கதைக்களம் மலேசியா என்பதால், கடந்த ஆண்டு இப்படத்தின் படப்பிடிப்பு மலேசியாவில் தொடங்கியது. மொத்த படப்பிடிப்பும் மலேசியாவில் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது.

விஜய் சேதுபதி நடித்து முடித்த அவரது 51வது படமான 'ஏஸ்' இறுதிக்கட்டத்தில் உள்ளது. இத்திரைப்படத்தில் விஜய் சேதுபதி பல வித்தியாசமான கெட்டப்புகளில் நடித்துள்ளார். விஜய்சேதுபதியுடன்அனைத்துகாட்சிகளிலும் பயணிக்கும் கதாபாத்திரத்தில் யோகி பாபு நடித்துள்ளார். ருக்மிணி, விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். மேலும் ஜஸ்டின் பிரபாகரன் படத்திற்கு இசை அமைத்திருக்கிறார்.

இந்த நிலையில், விஜய் சேதுபதி பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கான கிளிம்ஸ் வீடியோவை 'ஏஸ்' படக்குழுவினர் தற்போது பகிர்ந்துள்ளனர்.

# அஜித்தின் 'விடாமுயற்சி' டிரெய்லர் வெளியீடு




தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடித்துள்ளார். மகிழ் திருமேனி இயக்கிய இப்படத்திற்கு அனிருத் இசையமைத்திருக்கிறார். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் அர்ஜுன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன், ஆரவ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இப்படம் பொங்கல் அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டநிலையில், பின்னர் அன்று வெளியாகாது என்று படக்குழு அறிவித்தது. அஜித் நடித்த மற்றொரு படமான 'குட் பேட் அக்லி' ஏப்ரல் 10ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டதால் 'விடாமுயற்சி' திரைப்படத்தை இம்மாத இறுதியில் திரைக்குக் கொண்டு வர தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த சூழலில், விடாமுயற்சி படத்தின் டிரெய்லர் இன்று வெளியாகும் என்று படக்குழு நேற்று அறிவித்திருந்தது.

இந்நிலையில் 'விடாமுயற்சி' படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படம் பிப்ரவரி 6ம் தேதி வெளியாகிறது.

# 'பாட்டல் ராதா' படத்தின் டிரெய்லர் வெளியாகும் தேதி அறிவிப்பு




இயக்குனர் பா.ரஞ்சித் நீலம் புரொடக்சன்ஸ் சார்பில் தயாரித்துள்ள திரைப்படம் 'பாட்டல் ராதா'. இந்த படத்தை பா.ரஞ்சித்தின் உதவி இயக்குனர் தினகரன் சிவலிங்கம் இயக்கியுள்ளார். இந்த படத்தில் குரு சோமசுந்தரம், சஞ்சனா நடராஜன், ஜான் விஜய் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு ரூபேஷ் ஷாஜி ஒளிப்பதிவு செய்துள்ளார். மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு நிரம்பிய எமோஷனல் ரோலர்கோஸ்டராக இந்த படம் இருக்கும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர், பாடல்கள் மற்றும் டீசர் வெளியாகி வைரலாகின. இப்படம் வரும் 24ந் தேதி வெளியாகும் என நீலம் புரொடக்சன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் 'பாட்டல் ராதா' படத்தின் டிரெய்லர் வரும் 18ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# டெல்லி ரஞ்சி அணியின் கேப்டனாக களமிறங்கும் ரிஷப் பண்ட்?



இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் சொந்த மண்ணில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிராக டெஸ்ட் தொடரில் ஒயிட்வாஷ் ஆனது. இதனையடுத்து ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரிலும் தோல்வியை தழுவியது. அதன் காரணமாக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாமல் முதல் முறையாக வெளியேறியதுடன் 10 வருடங்கள் கழித்து பார்டர் கவாஸ்கர் கோப்பையையும் இழந்தது.

இதனால் இந்திய அணி மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. இந்த தோல்விகளுக்கு இந்திய அணி பேட்டிங்கில் சுமாராக செயல்பட்டது முக்கிய காரணமாக அமைந்தது. எனவே மூத்த வீரர்கள் உள்பட அனைவரும் உள்ளூர் முதல்தர கிரிக்கெட்டான ரஞ்சி போட்டியில் கட்டாயம் விளையாட வேண்டும் என்று தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் அறிவுறுத்தினார்.

இதனிடையே ரஞ்சி கோப்பை கிரிக்கெட்டின் அடுத்தகட்ட லீக் சுற்று ஆட்டங்கள் வருகிற 23ந் தேதி தொடங்குகிறது. இதில் முன்னணி வீரர்களான இந்திய அணியின் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் டெல்லி அணிக்காகவும், தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் மும்பை அணிக்காகவும் மற்றும் சுப்மன் கில் பஞ்சாப் அணிக்காகவும் களமிறங்க உள்ளனர்.

விராட் கோலி டெல்லி அணியின் உத்தேச பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார். ஆனால் அவர் விளையாடுவது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அதேபோல் ரோகித் சர்மா மும்பை அணியுடன் இணைந்து பயிற்சி மேற்கொண்டார். ஆனால் விளையாடுவது குறித்தும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் வரும் 23ம் தேதி தொடங்க உள்ள சவுராஷ்டிரா அணிக்கு எதிரான ரஞ்சி கோப்பை போட்டியில் டெல்லி அணியின் கேப்டனாக ரிஷப் பண்ட் செயல்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் மொத்த அணியின் விவரங்களும் அதிகாரப்பூர்வமாக நாளை (17012025) வெளியாகும் என்று கூறப்படுகிறது.

# லாஸ் ஏஞ்சல்சுக்கு நிவாரண நிதி வழங்கிய டென்னிஸ் வீரர்



அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒரு வாரத்துக்கும் மேலாக நீடித்து வரும் காட்டுத் தீயைத் தூண்டிய காற்று, மேலும் அதிகமாகும் என்று முன்னெச்சரிக்கையால், நகரின் பல பகுதிகளும் அதி தீவிர அச்சத்தை எதிர்கொண்டுள்ளன. இதனிடையே, கலிபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீக்கு இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

நகரின் மேற்கு பகுதியில் உருவான பெரிய அளவிலான பாலிசேட்ஸ் காட்டுத் தீக்கு 23 ஆயிரத்திற்க்கும் அதிகமான பரப்பு எரிந்து நாசமாகி உள்ளது. இதில் 18 சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மற்ற இரண்டு காட்டுத் தீ இன்னும் கட்டுப்படுத்தப்படவில்லை. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னும் வெளியேற்ற உத்தரவால் தங்கள்பகுதிகளில் இருந்து வெளியே தங்கி உள்ளனர். இரவில் ஊரடங்கு உத்தரவும் அங்கு அமலில் உள்ளது.

இந்நிலையில் காட்டுத்தீக்கு இரையான லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தின் நிவாரண பணிகளுக்காக ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் வென்ற ரூ.71 லட்சம் பணத்தை வழங்க உள்ளதாக அமெரிக்க டென்னிஸ் வீரர் டெய்லர் பிரிட்ஸ் அறிவித்துள்ளார். மேலும் தன்னை வளர்த்த ஊருக்கு தன்னால் இயன்றதை செய்வதாகவும், மக்களுக்கு உதவ பலர் முன் வரவேண்டும் என்றும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: கோகோ காப் 3வது சுற்றுக்கு முன்னேற்றம்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் திருவிழா மெல்போர்னில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் கோகோ காப் (அமெரிக்கா), ஜோடி பர்ரேஜ் (இங்கிலாந்து) உடன் மோதினார்.

இதில்தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கோகோ காப் 63 மற்றும் 75 என்ற நேர் செட்கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.